03.07.2026

அ.வ.எண். 113/2011

வா.சா.1 சந்திரன், 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. ஏற்கனவே நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.36/2013 வழக்கில் உள்ள சொத்துகளின் நான்கு எல்லைகளின் விவரம் தெரியுமா என்றால் தெரியும். கிழக்கே பாதை, மேற்கில் வீரராகவன் என்னிடம் வாங்கிய நிலம், வடக்கில் வெங்கடேசன் நிலம், தெற்கில் வீரராகவன் இடம். மேற்சொன்ன அசல் வழக்கு எண்.36/2013 வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையிலுள்ள சொத்து விவரத்தின் நான்கு எல்லைகள் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. என் உடன்பிறந்தவர்கள் என்னுடன் சேர்ந்து மூன்று நபர்கள் அவர்களின் பெயர் தனபாக்கியம், அம்சம் மற்றும் நான். அவர்கள் தற்போது உயிருடன் இல்லை, திருமணமாகி 1985ம் வருடம் இறந்துவிட்டார்கள். அவர்களின் வாரிசுகள் உள்ளார்களா என்றால் சரிதான்.

2. எனது தகப்பனார் எனக்கு உயில் எழுதி வைத்ததன் அடிப்படையில்தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. தாவாசொத்தை பொறுத்து எனது தகப்பனார் எனக்கு எந்த ஆவணமும் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் இல்லை. எனது தகப்பனார் தனிபட்ட முறையில் கிரையம் வாங்கிய சொத்தா என்றால் இல்லை, அவரது பூர்வீக சொத்தாகும். 03.07.1971ம் தேதியில் பெருமாள் ஆச்சாரி மற்றும் அவரது குமாரர்களிடமிருந்து எனது தகப்பனார்

தாவாசொத்தை கிரையம் வாங்கினார் என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது. எனது தகப்பனாரின் பூர்வீக சொத்தில் எனது சகோதரிக்களுக்கு உரிமையுண்டு என்றால் இல்லை.

3. நான் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. மேற்சொன்ன கிரைய ஆவணத்தில் எதன் அடிப்படையில் எனக்கு சொத்து கிடைத்தது என்று கூறியுள்ளேன் என்றால் எனது அப்பாவின் பூர்வீக சொத்து என்று கூறியுள்ளேன். எத்தனை சர்வெ எண்ணிற்கு 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தேன் என்றால் ஒரே சர்வே எண்.291 ஆகும். எவ்வளவு விஸ்தீரணத்திற்கு கிரையம் கொடுத்தேன் என்றால் 1 ஏக்கர் 61 செண்டுக்கு மட்டும்தான் கிரையம் கொடுத்தேன், மீதி உள்ள 60 செண்ட் நிலத்தை என் கைவசம் வைத்துக்கொண்டேன்.

4. மேற்சொன்ன 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த கிரைய ஆவணத்தில் மேற்சொன்ன விவரங்கள் அதாவது நான் எனது கைவசம் 60 செண்ட் நிலத்தை வைத்துக்கொண்டேன் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. 'நான் விற்பனை செய்த 60 செண்ட் நிலம் போக' என்று தான் அந்த கிரைய ஆவணத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி, 10ம் பிரதிவாதி தசரதனுக்கு எவ்வளவு விஸ்தீரணத்திற்கு பொது அதிகாரம் கொடுத்துள்ளார் என்றால் 1 ஏக்கர் 61 செண்ட் நிலத்திற்கு மட்டும்தான் கொடுத்துள்ளார். எனது பிராதில் 5 வது பத்தியில் 1ம் பிரதிவாதி, 10 பிரதிவாதிக்கு முழு தாவாசொத்தையும்

பொது அதிகாரம் கொடுத்துள்ளார் என்று கூறியுள்ளேன் என்றால் இல்லை. 2 முதல் 9ம் பிரதிவாதிகளுக்கு 10ம் பிரதிவாதி கிரையம் கொடுத்த கிரைய ஆவணத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. மேற்சொன்ன கிரைய ஆவணங்களில் உள்ள நான்கு மால்களில் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்சொன்ன கிரைய பத்திரத்தை பொறுத்து நான் எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான்.

5. 2 முதல் 9 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தை பொறுத்து எனக்கு எந்த ஆட்சேபணையும் கிடையாதா என்றால் சரிதான். வா.சா.ஆ.28 உயில் ஆவணம் பற்றி ஏதாவது விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.28 உயில் ஆவணத்தில் உள்ள சொத்து விவரங்கள் பற்றி தெரியுமா என்றால் எனது வழக்கறிஞர் தாக்கல் செய்த ஆவணம் அதை பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.28 உயில் ஆவணம் எனது அப்பா எனக்கு எழுதிக் கொடுத்த உயில் ஆவணமா என்றால் எனக்கு எழுதி தரவில்லை. வா.சா.ஆ.28 முதல் 35 வரையிலான ஆவணங்கள் குறித்த விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும்.

6. வா.சா.ஆ.34 பட்டா இன்றைய தேதியில் நடைமுறையில் இல்லை என்றால் சரியல்ல, எனது அப்பா பெயரில் தான் உள்ளது. கன்னிப்பன் மற்றும் ஏழுமலை பெயரில் பட்டா மாறிவிட்டதா என்றால் எனக்கு தெரியாது என்று சாட்சி கூறுகிறார். (சாட்சி அதாவது பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேள்விக்கு முன்னுக்கு பின் முரணாக பதில் கூறுகிறார்) தாவாசொத்தின் சர்வே எண்ணில் 1 ஏக்கர் 61 செண்ட் நிலத்தை நான் ஏற்கனவே 1ம்

பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டேன் அதனால் தாவாசொத்தில் எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் நான் கொடுத்த சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை, ஆனால் மீதம் உள்ள 60 செண்ட் நிலத்திற்குதான் நான் வழக்காடி வருகிறேன்.

7. நான் நிறுத்திக்கொண்ட 60 செண்ட் நிலம் 1ம்பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த சொத்திற்கு வடமேற்கு மூலையில் உள்ளது என்றால் சரியல்ல. நான் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த 1 ஏக்கர் 61 செண்ட் நிலத்தை வீட்டு மனைகளாக பிரித்து விற்பனை செய்துவிட்டார் என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது. மேற்சொன்ன வீட்டு மனைகளை கிரையம் வாங்கிய நபர்கள் வீடு கட்டிவிட்டார்கள் என்றால் சுமார் 3 வீடு கட்டியுள்ளார்கள். வடமேற்கு மூலையில் உள்ள சொத்து காலியாக தான் உள்ளது என்றால் சரிதான். அதில் தற்போது சவுக்கு பயிர் செய்து வருகிறார்கள் என்றால் இல்லை.

8. நான் 1ம் பிரதிவாதிக்கு கொடுத்த சொத்தில் நான்கு மால்கள் விவரம் குறிப்பிடாமல் கிரையம் கொடுத்துவிட்டேன், அதை சாதகமாக எடுத்துக்கொண்டு தாவா வழக்கு சொத்தை நான் கைவசம் வைத்துகொண்டேன் என்று பொய்யாக வழக்கு தாக்கல் செய்து நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் உண்மையிலே வழக்கு சொத்தை நான் நிறுத்திக் கொண்டிருந்தால் 2007ம் வருடமே 1ம் பிரதிவாதி வீட்டு மனைகளான பிரித்து விற்பனை செய்து போது ஆட்சேபணை தெரிவித்திருப்பேன், அவ்வாறு இல்லாததால்தான் நான் ஆட்சேபணை

செய்யவில்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.36/2013 வழக்கில் சொத்து விவரத்தில் நான் நிறுத்திக் கொண்ட 60 செண்ட் நிலத்திற்கு தெற்கு பக்கம் வீரராகவன் நிலம் மற்றும் மேற்கு பக்கம் கோவிந்தசாமி நிலம் உள்ளது என்று கூறிவிட்டு தற்போது இந்த வழக்கில் தெற்கு மற்றும் மேற்கு பக்கம் வீரராகவன் நிலம் என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

9. 2010ம் வருடம் கன்னியப்பன் மற்றும் ஏழுமலை வீடு கட்டிவிட்டார்கள் என்றால் கிரையம் வாங்கிய பிறகு 2 வருடம் கழித்துதான் வீடு கட்டினார், (நீதிமன்ற கேள்வி எப்போது கன்னியப்பன் மற்றும் ஏழுமலை கிரையம் வாங்கினார்கள் என்றால் எனக்கு தெரியாது என்று சாட்சி கூறுகிறார்). தாவா சர்வே எண்ணில் 60 செண்ட் நிலத்தில் செல்லமுத்து கவுண்டர் சவுக்கு பயிர் செய்து வருகிறாா் என்றால் இல்லை. 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த கிரைய ஆவணத்தில் நான்கு மால் விவரத்தில் செல்லமுத்து கவுணடர் கிரையம் கொடுத்த 60 செண்ட் நிலத்திற்கு போக மீதம் உள்ள நிலத்தை கிரையம் கொடுத்தேன் என்றுள்ளது, எனவே செல்லமுத்து கவுண்டர்தான் 60 செண்ட் நிலத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல.

10. தாவா சர்வே எண்ணில் உள்ள மொத்த சொத்தையும் நான் 1ம் பிரதிவாதிக்கும் செல்லமுத்து கவுண்டருக்கும் விற்பனை செய்துவிட்டேன் அதனால் எனக்கு இந்த வழக்கு சொத்திற்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.28 உயில் ஆவணம் விவரங்கள் பற்றி 1ம்

பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த கிரைய ஆவணத்தில் சொல்லவில்லை, எனவே பொய்யான உயில் ஆவணம் என்பதால்தான் கிரைய ஆவணத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனவே தாவாசொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை, எனவே இவ்வழக்கு அதிகபட்ச செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால சரியல்ல.